செ.வெ.எண்-49 நாள்-25.09.2020

**அரியலூர் மாவட்டம்**

**தேசிய ஊட்டச்சத்து மாதத்தினை முன்னிட்டு அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.09.2020) நடைபெற்றது.

தேசிய ஊட்டச்சத்து செபட்ம்பர்-2020 மாதத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இதற துறைகளுடன் இணைந்து பணியாற்றும் விதத்தை பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும், ஒவ்வொரு துறைகளிலும் கடுமையான ஊட்ச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளை முன்னேற்ற அனைத்து துறைகள் மூலம் வீட்டுத்தோட்டம் அமைக்க அறிவுரை வழங்கப்பட்டு, அனைத்து துறைகளிலும் எத்தனை தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகளை ஜெயங்கொண்டம் மற்றும் அரியலூர் அரசு மருத்துவமனைகளில் உள்ள குழந்தை நல மருத்துவரிடம் பரிசோதனை செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, ஒருங்கிணைந்த குழ்நதை வளர்ச்சித்திட்ட அலுவலர் சாவித்ரி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**